1915

# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## புவியியல்

தரம் -07 | சுட்டெண் :- | நேரம்:- 2 மணித்தியாலம்

### பகுதி - I

<u>மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.</u>

(1) ஞாயிற்றுத் தொகுதியில் உயிரின வாழ்க்கைக்குச் சாதகமான சூழல் காணப்படுகின்ற ஒரேயொரு கோள்?

1) புதன் 2) புவி 3) வியாழன் 4) வெள்ளி

(2) புவி மேற்பரப்பின் மொத்தப் பரப்பளவு

1) $65610km^2$ 2) $12757km^2$ 3) $12714km^2$ 4) $510km^2$

(3) ஆசியாக் கண்டத்தினுள் அமைந்துள்ள கடல்

1) வடகடல் 2) கரீபியன் கடல் 3) பால்டிக் கடல் 4) கஸ்பியன் கடல்

(4) இலங்கையின் வர்த்தகத் தலைநகரம்

1) ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம் 2) அனுராதபுரம் 3) கொழும்பு 4) கண்டி

(5) இலங்கையில் இயற்கையாக உருவான தேசிய மரபுரிமை அம்சங்களில் ஒன்று

1) சிகிரியா 2) கதிர்காமம் 3) சிங்கராஜவனம் 4) மடுத்தேவாலயம்

(6) இலங்கையை ஊடறுத்துச் செல்லும் வட அகலக்கோடு

1) $4^0$ வடஅகலக்கோடு 2) $5^0$ வடஅகலக்கோடு

3) $9^0$ வடஅகலக்கோடு 4) $10^0$ வடஅகலக்கோடு

(7) உலகின் மிகப் பெரிய கண்டம்

1) ஆபிரிக்கா 2) ஆசியா 3) வடஅமெரிக்கா 4) தென்அமெரிக்கா

(8) இலங்கையின் எழுத்தறிவு வீதம்

1) 90% 2) 92% 3) 96% 4) 98%

(9) ரம்zhான் பண்டிகையைக் கொண்டாடும் மதம்

1) இஸ்லாம் மதம் 2) இந்து மதம் 3) பௌத்தம் மதம் 4) கிறிஸ்தவம் மதம்

(10) இலங்கையில் விவசாயிகள் நெல் அறுவடைசெய்யும் காலப்பகுதி

1) நவம்பர், டிசம்பர் 2) பெப்ரவரி, ஆகஸ்ட்

3) மார்ச், ஏப்ரல் 4) செப்ரெம்பர், ஒக்டோபர்

(11) பின்வருவனவற்றில் கரையோரப்பகுதிக்குரிய தரைத்தோற்ற அம்சம்

1) எச்சக்குன்று 2) குடா 3) பள்ளத்தாக்கு 4) மேட்டுநிலம்

(12) தென்னாசியாவில் ஆயுள் எதிர்பார்ப்பு உயர்மட்டத்தில் காணப்படும் நாடு

1) மாலைதீவு 2) இந்தியா 3) பூட்டான் 4) நேபாளம்

(13) இலங்கைக்கு மார்ச், ஏப்ரல் மாதங்களில் அதிக மழை கிடைக்கும் முறை

1) வடகீழ் பருவக்காற்று 2) சூறாவளி 3) தென்மேல் பருவக்காற்று 4) மேற்காவுகை

(14) உலகின் மிகவும் சிறிய சமுத்திரம்

1) ஆட்டிக் சமுத்திரம் 2) அந்தாட்டிக் சமுத்திரம்

3) இந்து சமுத்திரம் 4) அத்திலாந்திக் சமுத்திரம்

(15) கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள இந்துக்களின் வழிபாட்டுத்தலம்

1) கதிர்காமம் 2) நல்லூர்

3) திருக்கோணேஸ்வரம் 4) திருக்கேதீஸ்வரம்

(16) கடற்கரையோரங்களுக்கு அருகில் பயிரிடப்படும் பயிர் வகை

1) நெல் 2) தென்னை 3) இறப்பர் 4) தேயிலை

(17) தென்னாசியாவில் மிகவும் பெரிய நாடு

1) பாகிஸ்தான் 2) இந்தியா 3) இலங்கை 4) பங்காளதேஷ்

(18) பின்வருவனவற்றில் வரட்சியால் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்பு

1) விவசாய அறுவடை அழிவடைதல் 2) உணவுப் பற்றாக்குறை ஏற்படுதல்

3) தொற்று நோய்கள் பரவுதல் 4) தரைக்கீழ் நீர்மட்டம் குறைவடைதல்

(19) இலங்கையில் வெள்ளப்பெருக்கினால் அதிகம் பாதிக்கப்படும் மாவட்டம்

1) யாழ்ப்பாணம் 2) வவுனியா

3) களுத்துறை 4) அம்பாந்தோட்டை

(20) யானைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம்

1) பின்னவெல 2) யால 3) வில்பத்து 4) குமண

**(20 x 2 = 40 புள்ளிகள்)**

## பகுதி - II

<u>முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.</u>


(1) 1) புவியியல் பாடத்தில் இரண்டாம் தவணைக்காக உமக்கு வழங்கப்பட்ட கணிப்பீட்டு வகைகள் இரண்டினையும் தருக. (2புள்ளிகள்)

2) அக்கணிப்பீடுகளை மேற்கொண்ட பாட அலகுகளைத் தருக (2புள்ளிகள்)

3) அக்கணிப்பீடுகளை மேற்கொள்வதற்கு ஆசிரியரால் உமக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் இரண்டு தருக. (4புள்ளிகள்)

4) இக் கணிப்பீடுகளை மேற்கொண்டதால் பாட ரீதியாக நீர் பெற்றுக் கொண்ட பயன்கள் இரண்டு தருக? (4புள்ளிகள்)

(2) கீழே தரப்பட்டுள்ள உலகப் புற உருவப்படத்தில் A - L வரை குறித்துக் காட்டப்பட்டவற்றை 1 -12 வரை தரப்பட்ட விடயங்களுக்குப் பொருத்தமான எழுத்தைத் தெரிவு செய்து எழுதுக.





| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | மடகஸ்கர் | (   ) | 7) | ஆபிரிக்கா | (   ) |
| 2) | அவுஸ்ரேலியா | (   ) | 8) | அத்திலாந்திக் சமுத்திரம் | (   ) |
| 3) | மத்தியகோடு | (   ) | 9) | கடகக்கோடு | (   ) |
| 4) | கிரீன் விச்கோடு | (   ) | 10) | சீனா | (   ) |
| 5) | இந்தியா | (   ) | 11) | வங்களாவிரிகுடா | (   ) |
| 6) | பாக்கு நீரிணை | (   ) | 12) | கிரீன்லாந்து | (   ) |

(12புள்ளிகள்)

(3) 1) புவிச்சுற்றுகை என்றால் என்ன?

2) புவிச்சுற்றுகையினால் ஏற்படும் விளைவு யாது?

3) புவி முழுமையான கோளவடிவம் இல்லை என்பதற்கான ஆதாரங்கள் இரண்டு தருக.




4)மேலே தரப்பட்ட படத்தில் A,B,C எனக்காட்டப்பட்டுள்ள அகலக்கோடுகளைப் பெயரிடுக.

**(4 x3 =12 புள்ளிகள்)**

(4) 1) இலங்கையில் காணப்படும் மனிதனால் உருவாக்கப்பட்ட மரபுரிமை அம்சங்கள் மூன்று தருக?

2) இலங்கையில் ஆதிவாசிகள் வாழும் இடங்கள் மூன்று தருக?

3) பௌத்த மதத்தவர்களால் கொண்டாடப்படும் விழாக்கள் மூன்று தருக?

4) காணமுடியாத மரபுரிமை அம்சங்கள் மூன்று தருக? **(4 x3 =12 புள்ளிகள்)**

(5) 1) இடர் என்றால் என்ன?

2) வரட்சி ஏற்படுவதற்கான காணரங்கள் மூன்று தருக?

3) இலங்கையில் வரட்சியினால் அதிகம் பாதிக்கப்படும் மாவட்டங்கள் மூன்று தருக?

4) வெள்ளப் பெருக்கினால் ஏற்படும் பாதிப்புகள் மூன்று தருக?


**(4 x3 =12 புள்ளிகள்)**

(6) 1) படத்தில் காட்டப்பட்டுள்ள தரைத்தோற்ற வலயத்தில் 1, 2, 3 என இலக்கமிடப்பட்ட வலயங்களைப் பெயரிடுக.

2) இலக்கம் 3 இல் இனம் காணக்கூடிய நில உறுப்புகள் மூன்று தருக.

3) இலக்கம் 1 இல் காணப்படும் நீர்வீழ்ச்சிகள் மூன்று தருக.

4) இலக்கம் 1 இல் காட்டப்படும் தரைத்தோற்ற வலயத்தில் இருந்து இலங்கையின் பொருளாதாரத்திற்குக் கிடைக்கும் பயன்கள் மூன்று தருக.




**(4 x3 =12 புள்ளிகள்)**